முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1185

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.12.2022, செவ்வாய்கிழமை

1. வரம்பெற்று வந்த வள்ளலே
   வாழுகின்ற ஞானியே அரங்கனே
   அறம்கொண்டு இந்த கலியுகத்தையே
   ஆற்றல்மிக்க ஞான யுகமாக மாற்ற வந்த தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 12 ம் நாள் 27.12.2022, செவ்வாய்கிழமை)
   ஆசியதும் அரங்கன் கரம் பட்டால்தான்
   அகிலமே புனிதம் காணக்கூடும்
3. கூடுமே அரங்கன் திருவடி நோக்கத்தால்
   குவலயத்தார் அனைவருக்கும் ஞான சித்தி உறுதியாகும்
   ஈடேற்றம் இந்த உலகில் அரங்கன் தயவாலே
   யுகபரத்தார் அனைவரும் கண்டு இனிதே
4. இனிதே பிறவாபெரும்பேற்றை
   இயம்பிடுவேன் அரங்கன் ஆசியால் அடைவர்
   அடையவே அனைத்தும் சித்தி தரும்
   ஆற்றல்கொண்டதொரு ஞான லோகம் படைத்து நன்கு
5. மாற்றம் அரங்கன் ஆசியால் இனிதே காணும் மக்களெல்லாம் பசிபிணி அகன்றுஇனிதே
   மண்ணுலகை காக்கும் மகா சித்திகளாக மாறி
   மாறியே அரங்கன் வழி தேற்றம்
   மாதர்மத்தைக் கொண்டு நடத்துவர்

கூறிவந்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–